பக்கங்கள் 16+5

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 23 புதன்கிழமை 05.05.2024 அதிர்வு 310

## மோடிக்கு சஜித் வாழ்த்து மழை!



இந்தியப் பிரத மராக மூன்றாவது தடவையாக அதி கூடிய வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட

04



# தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டம் பயனற்றது என்கின்றார் சம்பந்தன்

## ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளிடம் இன்று அவர் நேரடியாக எடுத்துரைப்பு



வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பிரயோசன மற்ற திட்டம் என்பது தமது கருத்து எனத் தம்மை இன்று நண்பகல் சந்தித்த ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் குழுவிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் எம். பி. தெரிவித்தார்.

கொழும்பில் சம்பந்தனின் இல்லத்தில் இன்று நண்பகல் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சம்பந்தனுடன் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரனும் பங்குபற்றினார்.

கொழும்பு அரசியல் நிலைமைகள், ஜனாதிபதித் தேர்தல்கள் போன்றவை குறித்தும், தமிழர்களின் அரசியல் பிரச்சினைகள் பற்றி விரிவாகவும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாக அறியவந்தது.

04

# இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்ட தியாகி சிவகுமாரனின் சிலையில் அஞ்சலி



தியாகி பொன். சிவகுமாரனின் 50 ஆவது நினைவேந்தல், இராணுவத் தினரால் இடித்து அழிக்கப்பட்ட சிவ குமாரனின் திருவுருவச்சிலையில் தமிழ்த் தேசியவாதிகளால் இன்று காலை உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், அரசியல் ஆய்வாளரும் சட்டத் தரணியுமான சி.அ.யோதிலிங்கம், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன, அதன் செயலாளர் தனுபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அகவணக்கம் செலுத்திய துடன் திருவுருவச் சிலைக்கு தீபமேற்றி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

“உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு” என்ற இலட்சியத்துடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி. பொன் சிவகுமாரனின் திருவுருவச்சிலை 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி

04



# மன்னார் நீதிமன்று மீதான தாக்குதல் நாளைய தினம் வெளியாகும் தீர்ப்பு!

**பரபரப்புக்கு மத்தியில் எதிர்பார்ப்பு**

கடந்த 2013 ஆம் ஆண்டு மன்னார் நீதிவான் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தித் தீ வைத்தமையுடன் தொடர்புடைய வழக்கின் தீர்ப்பு நாளை வழங்கப்பட இருக்கின்றது.

இந்த வழக்கு கடந்த பதினொரு வருடங்களாக நடைபெற்று வந்த நிலையில் வழக்கு விளக்கம் யாவும் முடிவடைந்து தீர்ப்புக்காக நாளை திகதியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியங்கள் யாவும் இவ்வாண்டு மார்ச் மாதம் முடிவடைந்து ஒரு மாத காலத்துக்குள்ளாகவே எதிரிகள் தரப்பு சாட்சியத்துக்காக தவணை வழங்கப்பட்டது.

அந்நிலையில், எதிரிகள் தரப்பில் ஐம்பது பேரின் கூண்டுக்கூற்றுக்களும் இருவரின் சாட்சியமும் முற்படுத்துவதாக சமாப்பணம் செய்யப்பட்ட நிலையில் ஒரே நாளில் மாலை இருள் கவியும் நேரம் வரையாக ஐம்பத்தியொரு எதிரிகளின் கூண்டுக்கூற்றுக்களும் ஒருவரின் சாட்சியமும் பதிவு செய்யப்பட்டதுடன் விளக்கம் முடிவுறுத்தப்பட்டது.

இது நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நீதிமன்றம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பதால் நாளைய தினம் இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட இருப்பது குறித்து நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அக்கறையுள்ளவர்கள் மற்றும் நீதி விரும்பிகள் மத்தியில் பெரும் பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் தோற்றுவித்துள்ளது.

## முல்லைத்தீவில் இருந்து

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் தமிழகத்தில் தஞ்சம்



(எஸ்.ஆர்.லெம்பேட்)

முல்லைத்தீவில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் இன்று அதிகாலை இராமேஸ்வரத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

மேற்படி அறுவரும் நேற்று முல்லைத்தீவில் இருந்து மன்னாருக்குச் சென்று மன்னாரில் இருந்து சட்டவிரோதமாகக் கடல் வழியாகப் படகில் புறப்பட்டு இன்று அதிகாலை இராமேஸ்வரம் அடுத்த சேராங் கோட்டையை சென்றடைந்துள்ளனர்.

தந்தை, தாய் மற்றும் நான்கு பிள்ளைகள் உள்ளடங்களாக 6 பேர் இவ்வாறு தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கை தமிழர்கள் ஆறு பேரையும் மீட்ட மரைன் பொலிஸார் மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




# அனைத்து தமிழ்த் தலைவர்களுக்கும் சிலை அமைக்கப்படும்

## தியாகி சிவகுமாரன் நினைவு தினத்தில் அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு









(எஸ்.நிதர்ஷன்)

தேசிய நல்லிணக்கமும் அணுகுமுறைகளும் மட்டுமல்லாது எமது தற்துணிவுமே இன்று சிவகுமாரன் சிலை கம்பீரமாக நிமிர்ந்திருக்க காரணம் எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் கட்சி மற்றும் இயக்க வேறுபாடுகள் இன்றி, ஈழப் போராட்டத்தினை முன்னெடுத்த அனைத்து தலைவர்களுக்கு சிலைகளை அமைத்து அவர்கள் அனைவரையும் வரலாற்றில் நிலைநிறுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் உயிர் தியாகம் செய்த முதல் போராளி பொன் சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவு தினத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரும்பிராயிலுள்ள பொன் சிவகுமாரனின் உருவச் சிலைக்கு அருகில் இன்று இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபின் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

“தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய தமிழ்த் தலைவர்கள், போராளிகள், மக்கள் எனப் பலரும் நினைவுகூரப்பட வேண்டியவர்களாக உள்ளனர். அவர்களது நினைவேந்தல்களை செய்வதற்கான ஏற்பாடுகளும் குறிப்பாக அவர்களது நினைவுச் சிலைகள் நிறுவப்படுவது அவசியமாகும். இதில் கட்சி பேதங்களோ இயக்க வேற்றுமைகளோ இருக்கப் போவதில்லை.

பொன். சிவகுமாரனது உருவச்சிலை தற்போதுள்ள உருவச்சிலை நிறுவப்படுவதற்கு முன்னர் மூன்று தடவைகள் உடைத்தெறியப்பட்டது. இதற்கு சரியான புரிதல் இன்மையே காரணம் என்று நினைக்கின்றேன்.

ஆனால், 1999 களில் அன்றைய அரசுடன் எமக்கிருந்த நல்லுறவு, எமது தேசிய நல்லிணக்க வழிமுறை என்பவற்றுடன் எமக்கிருக்கும் தற்துணிவுமே இந்தச் சிலையை அமைப்பதற்கும் தலைநிமிர்ந்திருக்க முக்கிய காரணமாக உள்ளது.

அதுபோலதான் யாழ். மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டத்திலுள்ள மன்னர்களது சிலைகள், முத்திரைச் சந்தியிலுள்ள சங்கிலியன் சிலை, யாழ்.மடத்தடியிலுள்ள தனிநாயகம் அடிகளார் சிலை போன்றனவும் நிறுவப்பட்டன.

இதேநேரம் பொன் சிவகுமாரனது நினைவு நாளான இன்று தமிழர் அரசியல் பரப்பில் உள்ள பல கட்சியின் தலைவர்கள் முக்கியஸ்தர்கள் பிரமுகர்கள் என ஒன்றாக கூடியிருப்பதானது இந்நாளை அனைவரும் எமது இனத்தின் ஒரு பொதுவான நாளாக அடையாளப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இருப்பவைகளை பாதுகாத்துக் கொண்டு இழந்தவைகளை ஈடுசெய்யும் வகையில் முன்னோக்கி நகரவேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்துவதை போல, எமது மக்களின் உரிமைசார் விவகாரங்களிலும் நடைமுறை சாத்தியமான முன்னெடுப்புக்களை அனைத்து தரப்பினரும் இணைந்து முன்னெடுக்க முடியும்.

அதேபோன்று, எமது மக்களின் இருப்புக்கள் மற்றும் வரலாறுகள் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கான முயற்சிகள் அனைத்திற்கும் நாம் முழுமையான ஒத்துழைப்புகளுடன் முயற்சிகளையும் மேற்கொள்ள தயாராக இருக்கின்றோம்.” – என்றார்.

# 4 வயது மகனை மிலேச்சத்தனமாகத் தாக்கி கொடுமைப்படுத்திய தந்தை இன்று கைது!





(எஸ்.கீதபொன்கலன்)

தனது 4 வயதான மகனுக்கு உணவூட்டும்போது, பிள்ளையை மிலேச்சத்தனமாகத் தாக்கிய கோழி சமிந்த அல்லது பிபில சமிந்த (வயது 46) இன்று திருகோணமலை, புல்மோட்டை, அரிசிமலைப்பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த சில தினங்களாக சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொளியில் பிள்ளையைத் தாக்கும் காட்சி பகிரப்பட்டு வந்தது. இந்நிலையில், பிள்ளையைத் தாக்கியவரைப் பொலிஸார் கைது செய்ய முயன்றபோது அவர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்று விட்டார்.

இதனையடுத்து வெலிஓயா பொலிஸார், முல்லைத்தீவு குற்றப் புலனாய்வுப் பிரிவு, புல்மோட்டை விசேட படைப் பிரிவு என்பன இணைந்து நடத்திய தேடுதலின் பின்னர் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இவருடன் வெலிஓயாவைச் சேர்ந்த இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ்ப் பொது வேட்பாளர்

தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டம் குறித்து ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் சம்பந்தனிடம் கேட்டனர்.

"அது பிரயோசனமற்ற திட்டம் என்பதே எனது கருத்து. தமிழர்கள் தங்கள் அபிலாஷைகள் - எதிர்பார்ப்புகள் - யாது என்பதை கடந்த எழுபது வருடங்களாகவே தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றனர். அதில் எந்த ஐயறவும், சந்தேகமும் இல்லை.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அதிகார பகிர்வு தங்களுக்குரியது என்பதை உறுதியாகவும் தெளிவாகவும் அவர்கள் தடையின்றி தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

அது தொடர்ந்து மறுக்கப்படுமானால் வெளிப்புற சுயநிர்ணய உரிமையை நாடும் உரித்தும் தமிழர்களுக்கு உண்டு. அதுவே கடைசி மார்க்கம்.

கொழும்பு அரசு இந்த விடயங்களையொட்டி சர்வதேச மட்டத்தில் எட்டப்படும் ஒப்பந்தங்கள், இணக்கங்களைக் கூட நடைமுறைப்படுத்தாமல் ஏமாற்றியே வருகின்றது. இலங்கை - இந்திய ஒப்பந்த இணக்கத்தைக் கூட கொழும்பு நடைமுறைப்படுத்தவில்லை. தான் ஏற்று தனது அரசமைப்பில் அடக்கிய விடயங்களைக் கூட அது நடைமுறைப்படுத்த மறுத்து நிற்கின்றது.

சர்வதேச சமூகம் இவற்றை வெறுமனே பார்த்துக் கொண்டு நிற்பதில் அர்த்தமில்லை. இத்தகைய போக்குக்கு முடிவு கட்டி, தமிழர்களுக்கு நீதி, நியாயமான தீர்வு கிட்டுவதற்கு சர்வதேச சமூகம் நியாயமான அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு."

- இவ்வாறு சம்பந்தன் இந்தச் சந்திப்பின் போது எடுத்துரைத்தார்.

### மோடிக்கு சஜித்...

நரேந்திர மோடிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வாழ்த்துத் தெரிவித்தார்.

குடும்ப பலம், செல்வ பலம், பரிவார பலம், உறவினர் பலம் இல்லாது, சாதாரண குடும்பத்தில் இருந்து குஜராத் பிரதேசத்தை மையமாகக் கொண்டு, முதலமைச்சராகக் கடமையாற்றி, சிறப்பான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து, பின்னர் தொடர்ந்து மூன்று தடவை இந்தியாவின் பிரதமராகத் தெரிவாகி ஆட்சியமைப்பதற்கு நியமிக்கப்பட்டமைக்கு நரேந்திர மோடி, பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குக்கு எதிர்க்கட்சித் தலைவர் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்தியாவின் பிரதமராக மூன்றாவது முறையாக தெரிவு செய்யப்பட்ட நரேந்திர மோடிக்கு இன்று நாடாளுமன்றத்தில் வாழ்த்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

### இராணுவத்தினரால்...

சிறை மீண்ட இளைஞர் முத்துக்குமாரசுவாமியால் திறந்து வைக்கப்பட்ட நிலையில், இராணுவத்தினராலும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய தரப்புக்களாலும் அந்தச் சிலை பல தடவைகள் உடைத்து நொறுக்கப்பட்டு உரும்பிராய் சந்தை வளாகத்தில் வீசப்பட்டு புதையுண்டு கிடந்த நிலையில், அதனைத் தமிழ் மக்கள் மீள எடுத்து சிவகுமாரனின் திருவுருவச் சிலை அமைத்த வளாகத்தில் மீள பிரதிதிஷ்டை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# புதிய வலயக்கல்விப் பணிப்பாளர் சம்மாந்துறைக்கு நியமனம்!

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயகல்விப் பணிமனையின் நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளராக மட்டக்களப்பு மேற்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த செபமாலை மகேந்திரகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணி மனையின் 11 ஆவது வலயக் கல்விப் பணிப்பாளரான எஸ்.மகேந்திரகுமார் நேற்று முன்தினம் (03) திங்கட்கிழமை கடமையேற்றுக் கொண்டார்.

அவருடன் அவரது பாரியார் மட்டக் களப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரகுமாரும் வருகை தந்திருந்தார்.



இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான இவர், பணிப்பாளரைத் தேர்வு செய்யும் நேர்முகப் பரீட்சையில் தெரிவாகியதன் பலனாக, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க இந்த நியமனத்தை வழங்கியிருந்தார்.

இவரது 26 வருட கால கல்வி சேவையில் ஆசிரியராக, மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியின் அதிபராக, உதவி மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளராக ,மற்றும் பட்டிருப்பு மட்டக்களப்பு மேற்கு பதில் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார்.

புதிய பணிப்பாளரை கல்விசார் உத்தியோகத்தர்கள் சார்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம் வை.யசீர் அரபாத், எச்.நைரூஸ்கான், திருமதி நிலோபரா, பி.பரமதயாளன் ஆகியோர் மாலை சூட்டி வரவேற்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நித்திய கண்ட ஆட்சி

இந்திய உபகண்டத்தில் தேர்தல் திருவிழா முடிந்து விட்டது. இனி ஆட்சி அமைப்பதற்கான இழுபறித் திரு விழா தான் அரங்கேறும். குதிரை பேரங்கள் தாராளமாகக் கட்டவிழும்.

அதுவும் தனித்து எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவை யான 272 ஆசனங்கள் என்ற இலக்கை எட்டாத நிலையில், கூட்டணி ஆட்சி என்ற பேரம் பேசல் சந்தை சூடு பிடிக்கும்.

எது, எப்படி என்றாலும், பாரதிய ஜனதா தலைமையில் கூட்டணியாகக் களமிறங்கிய தரப்புகள் ஒன்று சேர்ந்து அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை எட்டி யிருக்கின்றனையால் அந்தக் கட்சிகள் சேர்ந்து உடனடியாக அரசு ஒன்றை அமைப்பதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு என்றே தோன்றுகின்றது.

ஆனால், அரசியலில் - அதுவும் இந்திய அரசியலில் - எதுவும் நம்புவதற்குரியவை அல்ல. எந்தச் சமயத்திலும் தலைகீழ் மாற்றங்கள் - நம்ப முடியாத கூட்டுக்களும் பிளவுகளும் - திடீர் திடீரென ஏற்படலாம்.

தம்முடன் தேர்தலில் கூட்டு வைத்துப் போட்டியிட்ட கட்சிகளின் தயவில்தான் தமது அரசை அமைத்துக் கொண்டிழுக்க வேண்டிய கட்டாயத்தில் பிரதமர் மோடி உள்ளார்.

ஆனால் அவர் கூட்டு அமைத்து இப் போது வெற்றி பெற்றுள்ள கூட்டணியின் பங்காளர்கள் இலேசுப்பட்ட அரசியல் வாதிகள் அல்லர். எந்த நேரமும் திடீர் திடீரென குத்துக்கரணம் அடிக்கக் கூடிய வர்கள். கடைசி நேரத்தில் கால்வாரக் கூடியவர்கள். அப்படித்தான் அவர்களின் கடந்த காலம் இருந்துள்ளது.

இப்போது பாரதீய ஜனதாவுடன் கூட்டிணைந்து வந்துள்ள பங்காளரான நிதிஷ்குமார் இந்தத் தேர்தலுக்கான ஆரம்பக் கட்டத்தில் பாரதீய ஜனதாவுக்கு எதிரான 'இண்டியா' கூட்டணி உருவாகத் தளம் அமைத்தவர். ஆரம்பகர்த்தா. திடீரென அந்தக் கூட்டணி தரப்பில் இருந்து வெளியேறி, பாரதீய ஜனதாவின் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்தவர். அதே குத்துக்கரணத்தைத் தலைகீழாக அடிப்பதற்கு அவருக்கு நேரம் செல்லாது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இப்போது பாரதீய ஜனதா கட்சியின் கூட்டணியில் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சியும் நிதீஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளமும் பிரதான பங்காளர்கள். இவர்கள் இரண்டு தரப்பினரதும் ஆதரவு இல்லாமல் இன்றைய நிலையில் மோடியால் அரசைக் கொண்டிழுக்க முடியாது.

ஆனால் இவர்கள் இருவரினதும் அரசியல் சரித்திரங்கள் சர்ச்சைக்குரியவை.

2019 ஆம் ஆண்டில் மோடிக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்தவர் இதே சந்திரபாபு நாயுடுதான்.

அதேபோல 2024 ஆம் ஆண்டில் மோடிக்கு எதிராக இண்டியா கூட்டணி உருவாகக் கால்கோள் இட்டவர் நிதீஷ்குமார்.

இப்போது இந்த இருவரும் தமது அரசியல் மேசையைத் திரும்பவும் திரும்பி போட்டு, வியூகத்தை மாற்றினார் கள் என்றால் மோடியின் பாரதீய ஜனதாக் கட்சி எதிர்க்கட்சிகள் வரிசையில் போய் அமர வேண்டி நேரும்.

இந்த இருவருமே தங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளை வைத்துக் கொண்டு இரண்டு தரப்பு கூட்டணிகளுடனுமே தர்க்க நியாயமின்றி பேரம் பேசக்கூடிய வர்கள் எனவும் சுட்டப்படுகின்றது.

ஏற்கனவே தம்முடைய ஆந்திர மாநிலத்துக்கு விசேட அந்தஸ்து பெறு வது தொடர்பான நிபந்தனையை ஆந்திர முதல்வராகும் சந்திரபாபு நாயுடு பாரதீய ஜனதா தலைவர்களுக்கு கோடி காட்டி விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல நிதீஷ் குமாரும் பிரதமர் அல்லது துணைப் பிரதமர் பதவி என்ற வாய்ப்பு தரப்படுமானால் அதற்காக அணிமாறப் பின்னிற்க மாட்டார் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்போது அதிகாரத்தில் இருக்கும் பாரதீய ஜனதாக் கட்சி அந்த அதிகார பலத்தைத் தக்க வைத்துக்கொண்டு ஒரு வாறு சமாளித்து, கூட்டணிகளின் பங் காளிகளை அமர்த்திப் பிடித்து ஆட்சி அமைத்தாலும், அடுத்த ஐந்து வருடங் களும் அதற்கு நித்திய கண்டம் என்ற நிலைமைதான் என்பதை மறுப்பதற்கு இல்லை.



# கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் மாளிகைக்காடு அல் ஹு சைன் சாதனை







(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட காரைதீவு கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் இரண்டு வலயத்துக்கு உட்பட்ட நிகழ்வுகளில் 18 வயது மற்றும் 14 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான மூன்று போட்டிகளில் முதலிடம் பெற்று சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று(4) இடம்பெற்ற போட்டியில் எச்.எம்.ஹஸ்னி 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல், உயரம் பாய்தல், தட்டெறிதல் ஆகிய நிழ்வுகளின் முதலிடங்களையும், எம்.ஸராப் 14 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 60 மீற்றர், நீளம் பாய்தல் மற்றும் உயரம் பாய்தல் போட்டிகளில் முதலிடங்களையும் பெற்று தத்தமது வயதுப் பிரிவுகளில் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 10 முதலிடங்களையும், 09 இரண்டாம் இடங்களையும், 13 மூன்றாம் இடங்களையும் பெற்று வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளனர்.

இந்த மாணவர்களுக்குப் பயிற்சியளித்த விளையாட்டு பொறுப்பாசிரியர் ஏ.எம் முஹம்மத் ரஜி, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.என். முஹம்மத் ஜஷாத் ஆகியோருக்கு அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சபை, பெற்றோர்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த சொற்பொழிவு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெள்ளி தோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'கருட புராணம் கூறும் தானங்கள்' எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகதாஸ் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுவாமிநாதன் தேவமனோகரன் நிகழ்த்தவுள்ளார்.



# மட்டக்களப்பு அரசடித்தீவைச் சேர்ந்த விழிப்புலனற்ற மாணவன் சாதனை!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரசடித் தீவைச் சேர்ந்த முன்னாள் போராளியின் மகனான பாலச்சந்திரன் பிரஷோபன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் 2 ஏபி சித்தி பெற்று ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாக சித்தியடைந்துள்ளார்.

மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் பாசாலையிலும், கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரியிலும் இவர் கல்வி பயின்றுள்ளார்.

இந்த மாணவனின் சாதனையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு வலய கல்விப் பணிமனையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளரும், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருமான திருமதி சுஜாதா குலேந்திரக்குமார் தலைமையில் இடம்பெற்ற பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் மாணவனின் தாய், கல்விப் பணிமனை உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.





# திருமலை சித்த மருத்துவ கல்லூரியில் இடம்பெற்றுள்ள விசேட விரிவுரைகள்

(எஸ்.கீதபொன்கலன்)

ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு வருகைதந்திருக்கும் டாக்டர் நித்தி கனகரத்தினம் கிழக்கு பல்கலைக் கழகத்தின், திருகோணமலை வளாகத்தில் அமைந்துள்ள சித்த மருத்துவ கல் லூரியில் மருத்துவம் தொடர்பான விசேட விரிவுரைகளை நடத்தினார்.

இலங்கையில் இவரை பலருக்கு சின்னமாமியே புகழ் பொப் இசை பிதா நித்தி கனகரத்தினம் என்றே தெரிந் திருக்கும்.

1981ஆம் ஆண்டில், வந்தாறுமூலை கிழக்கு பல்கலைகழகத்தின் முதலாவது விவசாய பீடாதிபதி இவர். அதன் பின் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாகப் புலம் பெயர்ந்து ஆஸ்திரேலியா விக்டோரியா பல்கலைக் கழகத்தின் மருத்துவவியல் விரிவுரையாளராக சுமார் 16 வருடங்கள் பணியாற்றியவர்.

அத்துடன் “பாரம்பரிய தமிழர் உணவுகளின் போஷனைக் கூறுகள் 8 ஓர் அறிவியல் நோக்கு” எனும் இவர் எழுதிய நூல் விரைவில் வெளியீடு காணவுள்ளது.

இவர் யாழ்ப்பாணம், நாவற்குழி, தச்சன்தோப்பு என்னுமிடத்தில் சித்த, மேற்கத்தேய இணைந்த மருத்துவ மனை ஒன்றை தனது சொந்த முயற்சியில் நிறுவியுள்ளார். விரைவில் அதன் சேவைகள் ஆரம்பிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடற்பரப்பில் அத்துமீறுவதை நிறுத்தினால் உங்களுடன் பேசத் தயார்!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் ஆலம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)




இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடிப்பதை சற்று நிறுத்திக் கொண்டால் உங்களுடன் பேசுவதற்கும், இந்தப் பிரச்சினையை இலகுவாக முடித்துக் கொள்வதற்கும் இரு தரப்பும் விட்டுக் கொடுப்புடன் பேசுவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று புதன்கிழமை (05) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக மீனவர்களின் தடை காலம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகிறது. அதனைத் தொடர்ந்து அவர்கள் தடை செய்யப்பட்ட இழுவை மடி தொழிலை எமது கடற்பரப்பில் நுழைந்து முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த அத்து மீறிய நடவடிக்கை தொடர்பில் நாங்கள் கடந்த காலங்களில் தொடர்ந்தும் விழியுறுத்தி வருகின்ற விடயம், அவர்களின் வருகையை கட்டுப் படுத்தவதாகவே அமைந்துள்ளது.

இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையைக் கட்டுப்படுத்த அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அரசின் நடவடிக்கைக்கு வடபகுதி மீனவர்களாகிய நாங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

எமது கடல் வளத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. அந்த வகையில் நாங்கள் மீண்டும் ஒரு அறை கூவலை விடுக்கின்றோம்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடிப்பதை நிறுத்துங்கள். இவ்வாறு நிறுத்திக் கொண்டால் உங்களுடன் பேசுவதற்கும், இந்துப் பிரச்சினையை இலகுவாக முடித்துக் கொள்வதற்கும் இரு தரப்பும் விட்டுக் கொடுப்புடன் பேசுவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

விட்டுக்கொடுப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பது உங்கள் நடவடிக்கையை பொறுத்துள்ளது.

இலங்கை அரசுக்கு நாங்கள் வலியுறுத்துவது, வடபகுதி கடற்பரப்பில் குறிப்பாக, இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் உள்நுழைவதை கட்டுப்படுத்த கடல் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும். எங்களுடன் கலந்தாலோசித்து உரிய தீர்வை எடுக்க முடியும்.– என்றார்.




# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மன்னாரில் கண்டல் தாவர நடுகை!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மன்னார் பெரிய பாலம் மற்றும் தள்ளாடி இடை நடுவில் காணப் படும் கரையோரப் பகுதிகளில் இன்று (5) காலை கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டன.

மன்னார் மாவட்ட அனர்த்த முகா மைத்துவ நிலையம் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலகம் இணைந்து மெசிடோ நிறுவனத்தின் உதவியுடன் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் மன் னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ் வரன் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு மரம் நடுகையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்கான 300 கண்டல் தாவரங்களை டினோஸா கண்டல் தாவரப் பள்ளி வழங்கியிருந்தது.

இந்த நிகழ்வில் மன்னார் நகர பிரதேச செயலாளர் ம.பிரதீப், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கனகரெத்தினம் திலீபன், மன்னார் மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, சுற்றுச் சூழல் கரையோர பாதுகாப்பு உத்தியோ கத்தர்கள், மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரிக்கு புதிய வைத்தியட்சகர் நியமனம்

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையின் புதிய வைத்தியட்சகராக ஐ. எம். ஜவாஹீர், கடந்த திங்கட்கிழமை தனது கடமையை வைத்தியசாலையில் வைத்து பொறுப்பேற்றுக் கொண்டார்.






# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பரிசளிப்பு விழா நிகழ்வுகள்

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை கல்வி வலய மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் புனித ரமழான் மாதத்தில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற இஸ்லா மிய போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை அதிபரும், பழைய மாணவர் சங்கத் தலைவருமான எம்.எம் ஹிர்பகான் தலைமையில் ஷம்ஸ் மத்திய கல் லூரி திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார். இந்த நிகழ்ச் சிக்கு கௌரவ அதிதி யாக கல்முனை வலயக் கல்விப் பணிப் பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக ஊவா வெல் லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளர் எம்.எப்.ஹிபதுல் கரீம், கிழக்கு பல்கலைக் கழகப்



பதிவாளர் எம்.எம்.மர்சூக், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப் பாளர் எம்.எச்.எம். ஜாபீர், மட்டக்களப்பு மத்திய கல்வி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம் அமீர், அல் ஹிக்மா ஜுனியர் வித்தியாலய அதிபர் எம்.எல்.எம் மஹ்ரூப், ஆசிய பௌண் டேசனின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம் வலீத், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.எஸ் உமர் அலி, சமட் ஹமீட், பாரா ளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் சப்றாஸ் நிலாம் உட்பட கல்வியாளர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.





# ஒரு வாரத்தில் யானை தாக்கி கிண்ணியாவில் மூவர் பலி!

(எச். எம். ஹலால்தீன் )

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மஜீத் நகர் பகுதியில் வேளாண்மை காவல் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த ஒருவர் யானை தாக்கியதில் நேற்று (04) இரவு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா பூவரசந்தீவை சேர்ந்த வெல்லாங்குளத்தில் வசித்து வந்த முஹைதீன் பிச்சை முகம்மது அனிபா (வயது 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை வேளாண்மை காவலில் ஈடுபட்ட ஏனைய மூன்று விவசாயிகளும் யானையின் பிடியிலிருந்து தப்பித்துள்ளனர்.

இவ்வாறு மரணமடைந்தவர் 5 பிள்ளைகளின் தந்தை எனவும், அவரது வீட்டிலிருந்து யானையைத் துரத்திச் சென்றபோது இரவு 9 மணியளவில் யானைத் தாக்குதலுக்கு ஆளானார் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

இந்தப் பகுதியில் சிறு போக நெற்பயிர்ச் செய்கை இடம் பெற்று வருவதால் அங்கு வருகை தரும் யானைகள் அங்குள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கும் நுழைந்து அச்சுறுத்துகின்றன என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த நபரைத் தாக்கிய யானை அங்குள்ள வீடு ஒன்றையும் சேதப்படுத்திச் சென்றுள்ளது.

அந்த வீட்டைச் சேர்ந்தவர், யானை தாக்க வருவதை அறிந்த நிலையில் பக்கத்து வீட்டில் தஞ்சமடைந்துள்ளார்.

அந்த ஓலை வீட்டினை யானை முற்றாக தாக்கிய நிலையில் அங்கு அமைக்கப்பட்டு வந்த கட்டடம் ஒன்றையும் உடைத்து அதனுள் வைக்கப்பட்டிருந்த நெல்லையும் அழித்துள்ளது.

அப் பகுதியில் ஒரு வாரத்திற்குள் 3 பேர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கிராமப்புற மக்களில் வாழ்வாதார பயிர்களான தென்னை, வாழை, கரும்பு முதலான பயிர்களையும் யானைகள் அழித்து வருகின்றன.

இந்தக் காட்டு யானைகளைத் தடை செய்வதற்கு மின்சார வேலிகள் இடப்பட்ட போதிலும் யானைகள் கிராமத்துக்குள் நுழைகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு அறுகம்பேயில் மாபெரும் சிரமதானம்

(றியாஸ் ஆதம்)

சுற்றுலாத்துறைக்கு பிரசித்தி பெற்ற அறுகம்பே கடற்கரை பிரதேசத்தையும் அதனை அண்டியுள்ள சுற்றுச் சூழலையும் பாதுகாக்கும் நோக்கில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் சிரமதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதான நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம். உவைஸ் தலைமையில் இடம்பெற்றது.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், அறுகம்பே ஆட்டோ உரிமையாளர் நலன்புரிச் சங்கம், கிளீன் ஸ்ரீலங்கா அமைப்பு, அறுகம்பே சுற்றுலா பொலீஸ் பிரிவு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்தச் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

“தூய்மையான கடற்கரை பிரதேசம்” எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், அறுகம்பே ஓட்டோ உரிமையாளர் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள், கிளீன் ஸ்ரீ லங்கா அமைப்பினர், அறுகம்பே சுற்றுலா பொலீஸ் பிரிவின் பொலீஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அறுகம்பே கடற்கரை பிரதேசத்தில் காணப்பட்ட பொலிதீன்கள், திண்மக் கழிவுப் பொருள்கள் துப்பரவு செய்யப்பட்டு அகற்றப்பட்டன. டெங்கு பெருகும் இடங்களும் அழிக்கப்பட்டன. மேலும் கடற்கரை பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த தடைகளும் அகற்றப்பட்டன.







# கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனிவாவுக்கு விஜயம்!

(எஸ்.கீதபொன்கலன்)

ஜெனிவாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான், தேசிய மக்கள் சக்தியின் தொழிற்சங்கவாதியான, வசந்த சமரசிங்கவை ஜெனிவாவில் சந்தித்துக் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுகுறித்துக்கலந்துரையாடப்பட்டது.

மேலும் இருவருக்குமான நீண்ட கால நட்புக் குறித்து நினைவூட்டப்பட்டது. உலகளவில் தொழிற்சங்கத்தின் நலனில் இருவரும் வலுவாக இணைந்து பணியாற்றியமை நினைவூட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் ராஜதுரையும் உடனிருந்தார்.



# போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சுக்குப் புதிய செயலாளர்

(கே. எ ஹமீட் )

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீஸன் பதவியுயர்வு பெற்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக இன்று (05) தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

அம்பாறை மாவட்டத்தில் மேலதிக அரச அதிபராக வி.ஜெகதீஸன் மூவின மக்களுக்காகவும் பாகுபாடு இன்றிப் பணியாற்றியவராவார்.



# மீண்டும் பிரதமராக மோடி சனியன்று பதவியேற்கிறார்

புதுடெல்லி,ஜூன்05

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தற்போதைய மத்திய அமைச்சரவையின் ராஜினாமாவை இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு ஏற்றுக் கொண்டார்.

வருகிற 8 ஆம் திகதி சனிக்கிழமையன்று மாலௌ மூன்றாவது முறையாக நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்கிறார்.

கூட்டணிக் கட்சிகள் ஆதரவுடன் மீண்டும் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையின் ராஜினாமாவை ஜனாதிபதி திரவுபதி முர்மு ஏற்றார். இன்று காலை மத்திய அமைச்சரவைக் கூட்டத்துக்கு பின் ஜனாதிபதி சந்தித்து நரேந்திர மோடி ராஜினாமா கடிதம் அளித்திருந்தார். 17 ஆவது பாராளுமன்றத்தை கலைக்கும் பரிந்துரைகளையும் ஜனாதிபதி திரவுபதி முர்மு ஏற்றுக் கொண்டார்.

நாடாளுமன்றத் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 291 இடங்கள் கிடைத்துள்ளன. பா.ஜ.கட்சி தனித்து 240 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. மீண்டும் தே.ஜ. கூட்டணி ஆட்சி அமைக்கும் சூழல் ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் மோடியை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. தற்போதைய லோக்சபாவை கலைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகிறது.

தொடர்ந்து வரும் 8 ஆம் திகதி (சனிக்கிழமை) அன்று மாலை மோடி 3 ஆவது முறையாக பதவி ஏற்றுக் கொள்வார் என தகவல் வெளியாகி உள்ளது. புதிய அமைச்சரவையும் பதவி யேற்கும் எனத் தெரிகிறது. தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டத் திற்கு பிறகு உறுதியான தகவல் வெளியாகும்.

அதன் அடிப்படையில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையின் ராஜினாமாவை ஜனாதிபதி திரவுபதி முர்மு ஏற்றார். மத்திய அமைச்சரவை கூட்டத்துக்கு பின் ஜனாதிபதி சந்தித்து நரேந்திர மோடி ராஜினாமாக் கடிதம் அளித்திருந்தார்.

17 ஆவது நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பரிந்துரைகளையும் ஜனாதிபதி திரவுபதி முர்மு ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதி, காபந்து பிரதமராகத் தொடரும்படி மோடியைக் கேட்டுக் கொண்டார்.

# தேர்தல் ஆணைய அங்கீகாரம் பெறுகிறது நாம் தமிழர் கட்சி


சென்னை,ஜூன்05

தேர்தல் ஆணையத்தின் தனிக் கட்சி அங்கீகாரம் பெறுகிறது நாம் தமிழர் கட்சி எனத் தெரிவிக்கப்படுகின்றது.


நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க., மற்றும் அ.தி.மு.க. கட்சிகளுக்கு அடுத்தபடியாக பா.ஜ.க. மற்றும் நாம் தமிழர் கட்சிகள் முக்கியமான கட்சிகளாக உள்ளன. இதில் நாம் தமிழர் கட்சிக்கு பல தொகுதிகளில் அதிக வாக்குகள் கிடைத்துள்ளன.

நாடாளுமன்ற தேர்தலில் 39 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி திருச்சி, கள்ளக்குறிச்சி, ஈரோடு, நாகப்பட்டினம் ஆகிய 4 தொகுதிகளில் பா.ஜ.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களையும், கன்னியாகுமரியில் அ.தி.மு.க. வேட்பாளரையும் பின்னுக்கு தள்ளி 3 ஆம் இடத்தைப் பிடித்துள்ளது. மீதமுள்ள அனைத்து தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி 4ஆம் இடத்தையே பிடித்துள்ளது. கடந்த தேர்தல்களில் கரும்பு விவசாயி சின்னத்தில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி இம்முறை மைக் சின்னத்தில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் 8 வீத வாக்குகள் பெற்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி, 8.19 வீத வாக்குகள் பெற்ற நாம் தமிழர் கட்சிகளுக்கு மாநில கட்சி அங்கீகாரத்தை இந்திய தேர்தல் ஆணையம் வழங்க உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தேர்தல் ஆணைய அங்கீகாரம் பெற 8 வீத வாக்குகள் தேவை என்ற நிலையில், தமிழகத்தில் 39 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி 8.19 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது. விடுதலை சிறுத்தைகள் கட்சி 2 தொகுதிகளில் தனிச் சின்னத்தில் நின்று வெற்றி பெற்றுள்ளது.



வாக்கு சதவீதம் தொடர்பான விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் இரு கட்சிகளும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதை தேர்தல் ஆணையம் உறுதி செய்து 15 நாள்கள் முதல் ஒரு மாத காலத்துக்குள் அதற்கான அங்கீகாரத்தை வழங்கும் எனவும் கூறப்படுகிறது.



# நிலவில் மாதிரிகளை சேகரித்துக் கொண்டு பூமிக்கு திரும்பி வருகின்றது சீன விண்கலம்

பீஜிங்,ஜூன் 05

நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கிய சீனாவின் விண்கலம் அங்கு சேகரிக்கப்பட்ட நிலவின் தரைத் துகள் மாதிரிகளுடன் பூமிக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது.

அந்த விண்கலம் வருகிற 25 ஆம் திகதி பூமிக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிலவின் தென்துருவத்தில் சந்திரயான்-3 விண்கலத்தை முதன் முறையாக தரையிறக்கி இந்தியா கடந்த ஆண்டு சாதனை படைத்தது.

இதனை தொடர்ந்து சாங்கே-6 என்ற செயற்கைகோளை நிலவின் தென்துருவத்துக்கு சீனா அனுப்பியது. இந்த செயற்கைகோளின் விண்கலம் கடந்த 2 ஆம் திகதியன்று நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

இந்த சாங்கே-6 விண்கலம் நிலவில் இருந்து பாறைகள் மற்றும் மாதிரிகளை சேகரித்து பூமிக்கு கொண்டு வருவதற்காக அனுப்பப்பட்டது. இதற்காக அந்த விண்கலத்தின் இயந்திரம் கடந்த இரு நாள்கள் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டது.

இந்த நிலையில் மாதிரிகளை சேகரித்த சாங்கே-6 விண்கலத்தின் லாண்டர் நிலவின் மேற்பரப்பில் இருந்து புறப்பட்டு அதன் சுற்றுப்பாதையில் நுழைந்துள்ளது. இது வருகிற 25 ஆம் திகதி பூமிக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தானில் நிலக்கரி சுரங்கத்தில் விஷவாயு தாக்கி பதினொரு பேர் பலி



பாகிஸ்தானில் நிலக்கரி சுரங்கத்தில் விஷவாயு கசிந்து 11 பேர் மூச்சுத்திணறி உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் ஏராளமான சட்டவிரோத சுரங்கங்கள் செயல்படுகின்றன. இந்தச் சுரங்கங்கள் அவ்வப்போது இடிந்து விபத்து ஏற்படுகிறது. எனவே இதனை தடுக்க அரசாங்கம் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபடுகிறது.

இந்தநிலையில் பலுசிஸ்தான் மாகாணம் குவெட்டா நகரில் தனியாருக்குச் சொந்தமான நிலக்கரி சுரங்கம் செயல்படுகிறது. இங்கு வழக்கம் போல் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

சுமார் 1,500 அடி ஆழத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது அந்தச் சுரங்கத்தில் திடீரென விஷவாயுக் கசிவு ஏற்பட்டது. சுரங்கத்தின் மற்ற பகுதிகளுக்கும் இந்த விஷவாயு வேகமாகப் பரவியது.

இதனால் அங்கிருந்தவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக மயங்கி விழுந்தனர். தகவலறிந்த மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அங்கு சென்ற அவர்கள் சுரங்கத்துக்குள் முதலில் தூய காற்றை செலுத்தினர்.

இதனையடுத்து உள்ளே சென்று பார்த்தபோது சுரங்க மேலாளர், ஒப்பந்ததாரர் உள்பட 11 பேர் மயங்கி கிடந்தனர். மீட்பு படையினர் உடனடியாக அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால் அவர்கள் அனைவரும் மூச்சுத்திணறி இறந்து விட்டனர் என மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து சுரங்கத்துக்கு சீல் வைக்கப்பட்டது. மேலும் இதுகுறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கனடா முரசு
பக்கங்கள் - 5
புதன்கிழமை 05/06/2024

## வாகனங்கள் மோதி விபத்து ஒருவர் எரிந்து உயிரிழப்பு!



ஒன்ராறியோ, ஜூன் 5
ஹாக்ஸ்பரிக்கு கிழக்கே இரண்டு வாகனங்கள் விபத்துக்குள்ளாகி தீப்பிடித்ததில் ஒருவர் C2 ▶

# வெளிநாட்டு அரச செயற்பாட்டாளர்களுடன் கனடா எம்.பிக்களின் தொடர்பு சர்ச்சையில்!

ஒன்ராறியோ, ஜூன் 05

சில கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு அரச செயற்பாட்டாளர்களுக்கு 'தெளிவாக' உதவினர் என நாடாளுமன்றக் குழு அறிக்கை கூறுவது தொடர்பில், அவர்கள் சட்டத்தை மீறுகிறார்களா என்பதை சட்ட அமலாக்க அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டும் என்று துணைப் பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு பெடரல் தேர்தல்களிலும் வெளிநாட்டு அரசாங்கங்கள் தலையிட்டனவா என்பது குறித்த ஆய்வைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுக் குழு திங்கள்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. C2 ▶



# எல்லைப் பணியாளர்கள் வேலை நிறுத்த முஸ்தீபு!

## வெள்ளி மாலை வரை காலக்கெடு



ஒன்ராறியோ, ஜூன் 05

அரசாங்கத்துடன் எந்த உடன்பாடும் எட்டப்படாவிட்டால் வெள்ளிக்கிழமை பிற்பகலில் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவுள்ளதாக ஆயிரக்கணக்கான கனேடிய எல்லைப் பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம், தெரிவித்துள்ளது.

ஆயினும்,தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் எல்லை இடையூறுகளைத் தவிர்க்க இன்னும் வாய்ப்புகள் உள்ளன என்று நம்புவதாக கனடாவின் பொதுச் சேவைக் கூட்டணி கூறுகிறது,

ஆனால் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு காலக்கெடுவை நிர்ணயித்துள்ளது.

கனடா எல்லை சேவைகள் நிறுவனத்தில் பணிபுரியும் 9,000க்கும் மேற்பட்ட தொழிற்சங்க உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்தம் இல்லாமல் உள்ளனர். C2 ▶

# Caregiver பணிக்காக கனடா வருபவர்களுக்கு வந்ததுமே உடன் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி

## சில புதிய திட்டங்களை அரசு அறிவிப்பு

Caregiver பணிக்காக கனடா வருபவர்களுக்கு எளிதில் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி கிடைக்கும் வகையில், சில புதிய திட்டங்களை கனடா அரசு அறிவித்துள்ளது.

Caregiver பணியாளர்களுக்கான தேவை கனடாவில் அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம் கடிய மக்களில் வயதானவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, Caregiver C2 ▶







### பாலியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள

# பில்லியனர் ராபர்ட் மில்லரின் நண்பர் ஒருவர் நேற்றுக் கைது

கியூபெக், ஜூன் 5

10 முறைப்பாட்டளார்களை உள்ளடக்கிய பல பாலியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள பில்லியனர் ராபர்ட் மில்லரின் நண்பர் எனக் கூறப்படும் ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என மொன்ரியல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மில்லரினால் பாதிக்கப்பட்டவர் எனக் கூறப்படும் ஒருவருடன் தொடர்புடைய பாலியல் சேவைகளைப் பெறுவதற்கான பிடிவிறாறந்தின் பேரில் 67 வயதான தெரசிட்டா ஃபுயென்டெஸ் நேற்று மொன்ரியலில் கைது செய்யப்பட்டார் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஃபியூச்சர் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் மில்லர், பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கடந்த வாரம் அவரது மொன்ரியல் வீட்டில் கைது செய்யப்பட்டார்.

அவரால் பாலியல் பலாத்காரத்திற்குஇலக்கானவர்களில்பலர்18வயதுக்குட்பட்டவர்கள் என்று கூறப்படுகின்றது.

1994 மற்றும் 2016 க்கு இடையில் பாலியல் வன்கொடுமை, பாலியல் குறுக்கீடு மற்றும் ஒரு நபரை விபசாரத்தில் ஈடுபடுத்துதல் உள்ளிட்ட 21 குற்றச் செயல்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

---

**Caregiver பணிக்காக...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

பணியாளர்களுக்கான தேவை அதிகரித்துள்ளது.

அடுத்த ஆறு ஆண்டுகளில், சுமார் 9 மில்லியன் கனேடியர்கள் பணி ஓய்வு பெற இருக்கிறார்கள். அதன் பொருள் என்னவென்றால், அவர்களை கவனித்துக்கொள்ள ஏராளமான பணியாளர்கள் தேவைப்படுவார்கள் என்பதே.

இன்னொரு விடயம், ஏற்கனவே Caregiver பணியிலிருப் போரில் பலர் 65 வயதைக் கடந்தவர்கள். உண்மையில் சொல்லப்போனால், இனி அவர்களைக் கவனித்துக்கொள்வதற்கு பணியாளர்கள் தேவைப்படுவார்கள்.

ஆக, இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, Caregiver பணியாளர்களுக்காக கனடா இரண்டு திட்டங்களை அறிவித்துள்ளது. அதன்படி, தகுதியும் அனுபவமும் உடைய, கனேடிய உயர்நிலைப்பள்ளி பட்டயப்படிப்புக்கு இணையான படிப்பை முடித்த, Caregiver பணிக்காக கனடா வருபவர்களுக்கு எளிதில், அல்லது கனடாவுக்குள் நுழைந்ததுமே, நிரந்தரக் குடியிருப்பு அனுமதி கிடைக்க வழிவகை செய்யப்பட உள்ளது.

இந்த அறிவிப்பு தொடர்பான மேலதிக விவரங்கள் விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. Caregiver பணி என்பது, வயதானவர்களை மட்டுமின்றி, குழந்தைகள் மற்றும் உடற்குறைபாடுகள் கொண்டவர்களையும் கவனித்துக்கொள்ளும் பணியாகும்.

---

**எல்லைப் பணியாளர்கள்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இரு தரப்பினரும் திங்கள்கிழமை மத்தியஸ்தம் செய்தனர்.

மற்ற சட்ட அமலாக்க நிறுவனங்களுடனான ஊதிய சமத்துவம், நெகிழ்வான டெலிவொர்க் மற்றும் வீட்டிலிருந்து வேலை விருப்பங்கள், ஓய்வூதிய பலன்கள் மற்றும் வலுவான பணியிடப் பாதுகாப்பு ஆகியவை முக்கியப் பிரச்சினைகளில் அடங்கும் என்று தொழிற்சங்கம் கூறுகிறது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எல்லை நிறுவனப் பணியாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கை கிட்டத்தட்ட வர்த்தக எல்லை தாண்டிய போக்குவரத்தை ஸ்தம்பிதப்படுத்தியது.

இதனால் நாடு முழுவதும் விமான நிலையங்கள் மற்றும் எல்லைகளில் பெரும் தாமதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

**வாகனங்கள் மோதி...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து மாலை 5 மணிக்கு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

டப்பர் தெரு மற்றும் கோல்ஃப் கிளப் சாலை இடையே உள்ள கவுண்டி சாலை 17 இல் இடம்பெற்ற இந்த விபத்தில் இரண்டு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்ததில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஏனையோர், பல்வேறு அளவிலான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

---

**வெளிநாட்டு...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அரசாங்கம், ஒவ்வொரு அரசியல் கட்சி, ஊடகம் மற்றும் தனியார் துறை உட்பட கனேடிய அரசியல் மற்றும் சமூகத்தின் பரந்த அளவில் வெளிநாட்டு தலையீடுகள் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை குற்றம்சாட்டியுள்ளது.

கனேடிய அரசியலில் தலையிட மற்ற நாடுகளின் முயற்சிகளில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'தெளிவாக' பங்கெடுத்தனர் எனவும் அது வெளிப்படையாகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தது.

சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் அனைத்து நடவடிக்கைகளும் 'நெறிமுறையற்றவை' என்றும், சில சட்ட விரோதமானவை என்றும் அந்த அறிக்கை பரிந்துரைத்தது.




# சட்டமன்ற உறுப்பினர் கட்சி மாறினார் ஓரினச்சேர்க்கையாளர் அணி அதிர்ச்சி

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜுன் 05 சட்டமன்ற உறுப்பினர் எலெனோர் ஸ்டர்கோவின் பிரிட்டிஷ் கொலம்பியா கன்சர்வேடிவ் கட்சியில் சேர்ந்தமை தொடர்பில் பிரிட்டிஷ் கொலம்பியா வில் உள்ள LGBTQ+ செயற்பாட்டாளர்கள் சிலர் அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் கன்சர்வேட்டிவ் கொள்கைகளை ஒரு காலத்தில் எதிர்த்த எலெனோர் ஸ்டர்கோவின் அண்மையில் கன்சர்வேட்டிவ் கட்சியுடன் இணைகிறார் என அறிவித்திருந்தார்.

பாலின நோக்குநிலை மற்றும் பாலின அடையாளப் பாடத்திட்டத்தை பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஒழிக்கக் கோரிய ஒரு கட்சியுடன் ஸ்டர்கோவின் மதிப்புகள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடியாதுள்ளதாக வான்கூவர் பிரைடின் முன்னாள் இணைத் தலைவரான சார்மைன் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஓரினச்சேர்க்கையாளர் மற்றும் LGBTQ+ உரிமைகளுக்காக ஒரு முக்கிய சட்டத்தரணியாக இருந்து வரும் ஸ்டர்கோ, திங்களன்று தான் அதிகார பூர்வ எதிர்க்கட்சியான பிரிட்டிஷ் கொலம்பியா யுனைட்டட் கட்சியிலிருந்து கன்சர்வேடிவ்களுடன் இணைவதாக அறிவித்திருந்தார்.

# கனடாவில் ஐஸ் கிறீம் கடையை உடைத்து 'சொக்லெட் சண்டே' தயாரித்த நபர் கைது





கனடாவில் ஐஸ்கிறீம் கடையொன்றை உடைத்து 'சொக்லெட் சண்டே' தயாரித்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவின் கெலெவ்னாவில் இந்த விநோத சம்பவம் பதிவாகியுள்ளது.

கடையின் முன் பக்க கதவை உடைத்து உட் பிரவேசித்த நபர் இவ்வாறு சொக்லெட் சண்டே தயாரித்துள்ளார்.

கதவை உடைத்து உள்ளே பிரவேசித்த போது கடையின் பாதுகாப்பு அலாரம் இயங்கிய காரணத்தினால் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

பொலிஸார் கடையுனுள் பிரவேசித்த போது நபர் ஒருவர் சொக்லெட் சண்டே தயாரித்துக் கொண்டிருப்பதைக் கண்டுள்ளனர்.

இந்த சம்பவம் அதிகாலை 4.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த சந்தேக நபர் பணத்தைக் கொள்ளையிடும் நோக்கில் கடையை உடைத்தார் எனத் தென்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐஸ் கிறீம் வகைகளை திருடும் நோக்கில் கடையை உடைத்தார் என்றே தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



# இணையத் தாக்குதல்களில் இருந்து காப்பதற்கு ‘திறன் மற்றும் கருவிகள்’ போதுமானவையல்ல!

## பெடரல் கண்காணிப்பு அமைப்பு கண்டறிவு

ஒன்ராரியோ, ஜூன் 05

கனேடியர்களை இணையத் தாக்குதல்களில் இருந்து திறம்படப் பாதுகாப்பதற்கும், இணையக் குற்றச் செயல்களின் அதிகரித்து வரும் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்கும் மூன்று முக்கிய ஏஜென்சிகளுக்கு ‘திறன் மற்றும் கருவிகள்’ இல்லை என்று பெடரல் கணக்காய்வு கண்காணிப்பு அமைப்பு கண்டறிந்துள்ளது.

நிறுவனங்களுக்கு இடையே மற்றும் முழுவதும் பதில், ஒருங்கிணைப்பு, அமலாக்கம், கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றின் முறிவுகளை ஒட்டி செவ்வாய்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில், கணக்காய்வாளர் நாயகம் கரேன் ஹோகன் விவரித்துள்ளார்.

ஹோகனின் மதிப்பாய்வு, RCMP கம்யூனிகேஷன்ஸ் செக்யூரிட்டி ஸ்தாபன சைபர்ஸ்பை ஏஜென்சி மற்றும் கனடிய வானொலி-தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்பு ஆணையம் ஆகியவற்றைப் கவனத்தில் எடுத்துக் கொண்டது.

சைபர் கிரைம் அறிக்கையை எங்கு உருவாக்குவது என்பதைக் கண்டுபிடிக்க மக்கள் விடப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

# கனடியர்கள் வங்கிகளுக்கு செல்ல விரும்புவதில்லை!

## ஆய்வில் இப்படித் தகவல்




கனடிய பிரஜைகள் வங்கிக் கிளைகளுக்குச் செல்ல விரும்புவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. கே.பி.எம்.ஜீ. என்னும் கணக்காய்வு நிறுவனம் இந்த ஆய்வை முன்னெடுத்துள்ளது.

நாளந்த வங்கித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வங்கிக் கிளைகளுக்கு மக்கள் செல்ல நாட்டம் காட்டுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கருத்துக் கணிப்பில் பங்குபற்றிய 48 வீதமானவர்கள் ஆண்டொன்றில் ஒன்று அல்லது இரண்டு தடவைகள் மட்டுமே வங்கிக் கிளைகளுக்குச் செல்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

இணைய வழியில் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், வங்கி கிளைகள் இயங்க வேண்டுமென 86 வீதமானவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கிராமிய பகுதிகளில் கிளைகளைத் தொடர்ந்தும் வங்கிகள் பேண வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பணத்தை வைப்பிலிடுதல் அல்லது மீளப் பெற்றுக் கொள்ளல் ஆகிய தேவைகளுக்காகவே வாடிக்கையாளர்கள் வங்கி கிளைகளுக்குச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# கைவிடப்பட்ட நிலையில் சிசு அடுக்குமாடி கட்டடத்தில் மீட்பு

## மற்றொரு குழந்தை சடலமாகக் கண்டுபிடிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 05

ஓர் அடுக்குமாடி கட்டடத்தில் கைவிடப்பட்ட நிலையில் ஒரு சிறு குழந்தை மற்றும் இரண்டாவது குழந்தையின் சடலம் என்பன கண்டெடுக்கப்பட்டமையை அடுத்து, 32 வயதுடைய பெண் ஒருவர் மீது குற்றவியல் அலட்சியத்தால் மரணத்தை ஏற்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ரஸ்ஸல் தெருவில் உள்ள ஓர் அடுக்குமாடிக் கட்டடத்தில், பேட்ரிக் மற்றும் கென்ட் தெருக்களுக்கு இடையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்தாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றவியல் அலட்சியத்தால் மரணத்தை ஏற்படுத்தியமை, வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை வழங்கத் தவறியமை மற்றும் 10 வயதுக்குட்பட்ட குழந்தையை கைவிட்ட இரண்டு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

குழந்தைகளின் வயது குறித்த கூடுதல் தகவல்களை பொலிஸார் வழங்கவில்லை.

# 2023 இல் டொராண்டோவில் வாகனத் திருட்டுக்கான உரிமைகோரல் தொகை 371.8 மில்லியன் டொலர்கள்

ஒன்ராரியோ, ஜுன் 05

2023 ஆம் ஆண்டில் டொராண்டோவில் வாகனத் திருட்டு உரிமைகோரல்கள் 371.8 மில்லியன் டொலர்களை எட்டியுள்ளது.

இது திருடப்பட்ட வாகனங்களை மாற்றுவதற்கான உரிமைகோரல்களின் விலையில் நகரத்தை ஒன்டாரியோவில் மிகவும் விலை உயர்ந்ததாக மாற்றியுள்ளதாக புதிதாக வெளியிடப்பட்ட தரவு காட்டுகிறது.



கனடாவின் காப்புறுதி பணியகம் கடந்த ஆண்டு வாகன திருட்டு உரிமைகோரல்களுக்காக ஒன்ராறியோவில் உள்ள முதல் 10 விலையுயர்ந்த நகரங்களின் பட்டியலை ஜுன் 4ஆம் திகதி வெளியிட்டது.

பிராம்ப்டன், மிசிசாகா, வோன், மார்க்கம் மற்றும் ஒட்டாவா ஆகியவை டொராண்டோவைத் தொடர்ந்து பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

பணியகத்தின் கூற்றுப்படி, கடந்த ஆண்டு ஒன்டாரியோவில் வாகனத் திருட்டுக் கோரிக்கைகளின் விலை 1 பில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ளது.

2018ல் இருந்து ஒன்ராறியோவில் 524 சதவீதமும், டொராண்டோவில் 561 சதவீதமும் வாகன திருட்டு உரிமை கோரல் செலவுகள் அதிகரித்துள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

# யூத மக்களின் தகுதி நிலை குறித்து பரீட்சையில் மாணவர்களிடம் வினா

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் புதிய சர்ச்சை

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜுன்05

பிரிட்டிஷ் கொலம்பியா பர்னபியில் உள்ள பாடசாலை ஒன்று யூத மக்கள் தகுதியானவர்களா அல்லது தாயகம் தேவையா என்பன குறித்து மாணவர்களைக் கேட்கும் தீங்கு விளைவிக்கும் பரீட்சை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப சமூகப் பரீட்சையில் 6 மற்றும் 7 ஆம் வகுப்பு மாணவர்களிடம் ஆசிரியர் ஒருவரால் இந்தக் கேள்வி கேட்கப்பட்டன.

'யூத மக்கள் தாயகத்திற்கு (இஸ்ரேல்) தகுதியானவர்கள் அல்லது தேவை என்று சிலர் நம்புகிறார்கள், மற்றவர்கள் இஸ்ரேல் இருக்கக்கூடாது என்று



நம்புகிறார்கள்' என்று அந்தக் கேள்வி கூறியதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட துணை. கரீம் ஹச்லாஃப் அறிக்கையில், எந்த நோக்கத்தைப் பொருட்படுத்தாமல், கேள்வி மிகவும் ஆழமானது மற்றும் மாணவர்களுக்கு, குறிப்பாக யூதக் குழந்தைகளுக்கு அதிர்ச்சியைத் தூண்டும்.

மாணவர்களில் ஒருவரின் குடும்பத்தினர் தேர்வு கேள்வியுடன் மாவட்டத்திற்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் கவலையை எழுப்பினார் எனக் கூறுகிறது.

விசாரணைக்கு கூடுதலாக, கூடுதல் ஆதரவுகள் என்ன தேவை என்பதைத் தீர்மானிக்க வகுப்பறையில் உள்ள குடும்பங்கள் மற்றும் யூத சமூகத்தை அணுகும் என்று மாவட்டத் தரப்புக் கூறுகிறது, மேலும் அதன் பள்ளிகளுக்குள் பொருத்தமான கற்றல் வளங்களைப் பயன்படுத்துவதற்கு நிர்வாகிகளுடன் இணைந்து செயல்படும் என்றும் கூறப்பட்டது.



# கனடாவிலிருந்து அமெரிக்காவிற்குள் பிரவேசித்த சீனப் பெண்மணி கைது!

சட்டவிரோதமான முறையில் கனடிய எல்லை பகுதியிலிருந்து அமெரிக்காவிற்குள் பிரவேசித்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க எல்லை பாதுகாப்பு படையினர் இந்தப் பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

நயகரா பிராந்தியத்திலிருந்து இந்தப் பெண் கால்நடையாகச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச ரயில் பாலத்தின் ஊடாக பெண்ணுருவர் நடந்து செல்வதை அவதானித்த அமெரிக்க எல்லைஒ பாதுகாப்புப் பிரிவினர் அந்தப் பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

அந்தப் பாலம் அமெரிக்காவையும் கனடாவையும் இணைக்கும் ரயில் பாலம் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத நடவடிக்கையின் ஓர் அங்கமாக இந்த சம்பவம் இருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கனடாவில் இருந்து அமெரிக்காவிற்குள் பிரவேசித்த போது அவரை அழைத்துச் செல்வதற்காக வாகனத்தில் வந்து காத்திருந்த நபர் ஒருவரையும் அமெரிக்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அந்தப் பெண் சீனாவை சேர்ந்தவர் என்பது விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.